குடவாசல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திரு.க. பாரதிதாசன்

ந.க.எண் 338/2024/அ1 நாள் 07.05.2025

பொருள் மனைப்பிரிவு – திருவாரூர் மாவட்டம் – குடவாசல் தேர்வுநிலை பேரூராட்சி – புல எண்கள் 35/30, 35/31ல் 5600 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் – இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை 1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களின் நடவடிக்கைகள் கடித ந.க.எண் 35148/2024/TVR/ நாள் 23.10.2024 மற்றும் ம.வ/மா.ந.ஊ.அ (TVR) எண் 74/2024
2) குடவாசல் பேரூராட்சி மன்ற தீர்மான எண் 492 நாள் 30.04.2025
3) இதர தொடர்புடைய ஆவணங்கள்.

.....

உத்தரவு–

திருவாரூர் மாவட்டம் குடவாசல் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட குடவாசல் வருவாய் கிராமம் புல எண்கள் 35/30, 35/31ல் 5600 ச.மீ பரப்பளவில் SSB நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு பார்வை 1ல் கண்டுள்ளவாறு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் இசைவு வழங்கப்பட்டுள்ளது. பார்வை 2ல் கண்டுள்ளவாறு இப்பேரூராட்சி மன்றத்தால், மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், புல எண்கள் 35/30, 35/31ல் 5600 ச.மீ பரப்பளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 28 மனைகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கீகாரம் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைத்து வழங்கப்படுகிறது.

07.05.2025

செயல் அலுவலர்
குடவாசல் தேர்வுநிலை பேரூராட்சி
திருவாரூர் மாவட்டம்.

இணைப்பு – ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்

பெறுதல் – திரு.ஆ. செல்வகுமார், த/பெ. ஆறுமுகம், 1500 ராஜமீனா நகர், சாக்கோட்டை கும்பகோணம்.

நகல்

1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்கள் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், குடவாசல்
3) வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குடவாசல்.